

# இயேசு பிறப்பு விழா
# வழியே மகிழ்ச்சி

இவாண்டின் யேசு கிறிஸ்துவின் பிறந்த நாள் ஏனைய விழாவினைப்போன்று இருந்திடாது என பலர் கூறுகின்றனர் .

அன்மையில் நடந்த தீவிரவாதிகள் எனப்படும் வன் கொடுமையாளர்களின் தாக்குதலையையும் , கொடுஞ் செயல்களையும் எண்ணும் பொழுது அச்சம்பவத்தில் உயிர் இழந்தோரின் குடும்பத்தினர்களை நினைக்கும் பொழுதும் , உலகினில் எல்லா வகையான கொடுமைகளுக்கும் ஆட்படும் கிறிஸ்தவர்களை நினைக்கும் பொழுதும் , உண்மைக்கும் , நீதிக்கும் என வாழ்பவர்களின் வாழ்க்கை இன்னலிலும் , மனமின்றி பல காரணகளுக்கெனெ தங்களின் நாட்டினை விட்டு எதிரிகளாக வெளியோறும் மக்களை எண்ணும் பொழுதும் நம் வாழ்வின் எண்ணிலா துன்பங்களை நினக்கும் பொழுதும் எவ்வாறு எதுவுமே நடக்காததை போன்று கிறிஸ்து பிறந்த விழாவினை நாம் கொண்டாடுவது ?

கிறிஸ்துவர்களாகிய நமக்கு விழாவினை கொண்டாடுவதை மனதில் மகிழ்ச்சிவுடன் இருப்பதே முதன்மையானது . மனிதர்களை காக்க அவர்கள் வழியாக பிறந்த குழந்தைக்காக மகிழ்ச்சியடைவோம் . அதற்காக அக்குழந்தைக்கு அரசியல் அல்லது சமய சாயநிறம் என்ற எந்த நிலைப்பாடுகளையையும் செயல்படுத்துவதில்லை .

ஆதிக்காலத்தில் கிராமம் கிராமமாக கால் நடையாக பல தூரப்பாதைகளில் நடந்து மனிதர்களுக்கு அம்மகிழ்ச்சிவூட்டும் செய்திகளை பகிர்ந்து வந்தனர் .அதில் புதினம் யாதெனில் இயேசுகிறிஸ்துவில் மகிழ்ச்சியான வழியினில் இறைவனின் வழியே இவ்வுலகில் நடந்து கொண்டிருக்கின்றது என்பதேயாகும் . அந்த இறைவாழ்வு சக்தி தீமையை அழிக்கும் மரணத்தை வெல்லும் .அதற்கு சான்றாக இயேசுவின் புதுமைகளே சாட்சி , குருடர்கள் பார்வையை பெற்றனர் , கால் நடக்க முடியாதவர்கள் நடந்தார்கள் , பெரு நோய் உள்ளோர் சுகம் கண்டனர், செவிடர்கள் சுகம் அடைந்தார்கள் , இறந்தோர்கள் உயிர் பெற்றார்கள் .

இறைவனின் ஆற்றல் அமைதியானது , எளிமையானது , அதனை ஒரு பெண் மூன்று படிமாவில் ஒரு துளி உவர் உப்பை வைத்ததற்கு ஒப்பிடலாம் . மேலும் ஒரு சிறிய தானியமான கடிகினில் பெரிய செடியிருப்பதனையம் உணரலாம் . சிலுவயின் வழியே இறைவனின் வியக்கத்தக்க சக்தியை முழுமையாக காண முடியும் . இயேசு பிறப்பு விழா வழியே மகிழ்ச்சி .

சிலுவையின் வழியே இறைவனின் வியக்கத்தக்க சக்தியை முழுமையாக காண முடியும் .

இவ்விழாவின் பொழுது நம் பேராயத்தின் பங்கு பொன் விழாவாக கொண்டாடுகின்றது ,
நம் நம்பிக்கையினை இழக்காதிருப்போம் . நம்பிக்கையை இழக்கும் பொழுது குடிலில் வீட்டிருக்கும் குழந்தை இயேசுவை ஆராதிப்போம் .அப்படி செய்வோர்க்கு அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்படும் , சோகங்கள் மறையும் , உங்கள் மனதிற்கு அமைதி கிடைக்கும் , தனிமையில் இருப்பவர்கள் இன்னிலையிலிருந்து மீக்கப்படுவார் .

இயேசுகிறிஸ்துவின் வழியே மகிழ்ச்சி என்றும் நிலைத்திருக்கும் .

உங்களுக்கும் , உங்கள் குடும்பத்தினர்களுக்கும் எனது அன்பான கிறிஸ்து பிறந்த நாள் வாழ்த்துக்கள்

உங்கள் அன்பு
*+ PASCAL DELANNOY (பாஸ்கால் தெலனொ)*
*EVEQUE SAINT-DENIS EN FRANCE ( சேன் டெனீஸ் ஆன் பிராண்ஸ் பேராயர் )*